## நமது முதல்வரின் ஓயாத உழைப்பும் – திட்டமிட்ட பணிகளும்தான் தமிழ்நாட்டில் அருஞ் சாதனைகளுக்கு அடிகோலிட்டு இருக்கிறது!

# நிதிப் பகிர்வில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு மாபெரும் ஓரவஞ்சனை!

## சட்டப்பேரவையில் துணை மானிய கோரிக்கை பதிலுரையில் – நிதியமைச்சர் தங்கம் தென்னரசு ஒன்றிய அரசுக்கு அடுக்கடுக்கான வினா!

**சென்னை, அக்.18- சட்டப்பேரவையில் துணை நிதிநிலை அறிக்கை மானியக் கோரிக்கையின் விவாதத்திற்கு பதிலளித்து நேற்று நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றுகையில் நமது முதல்வரின் ஓயாத உழைப்பும் - திட்டமிட்ட பணிகளும் தான் தமிழ்நாட்டில் அருஞ் சாதனை களுக்கு அடிகோலிட்டு இருக்கிறது என்றும் நிதிப் பகிர்வில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு மாபெரும் ஓரவஞ்சனை செய்கிறது என்றும் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், துணை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆற்றிய பதிலுரை வருமாறு :-

துணை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு பதிலளிக்கக்கூடிய நல்வாய்ப்பினை வழங்கியிருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவையின் தலைவரான பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர், முன் வரிசை தலைவர்கள் உள்ளிட்ட எதிர்க்கட்சி மற்றும் முன்வரிசையில் இருக்கக்கூடிய தோழமைக் கட்சியினுடைய தலைவர்கள், எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய தலைவர்கள் தங்களுடைய அரிய கருத்துகளை இங்கே சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நேற்றைய விவாதத்தினூடகவே, நான் தேவைப்படக்கூடிய இடங்களில் பல்வேறு விளக்கங்களைத் தந்திருக்கிறேன். எனவே, என்னுடைய பதிலுரையில், அவற்றுக்கான அந்த விளக்கங்களைத் தவிர்த்து, பொதுவாக இன்றைக்கு இருக்கக்கூடிய தமிழ்நாட்டினுடைய சூழ்நிலை, நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான காரணங்கள், ஒன்றிய அரசு எந்த அளவிலே நம்மை வஞ்சித்து வருகிறது என்பதையெல்லாம் நான் உங்களிடத்தில் எடுத்துச் சொல்வது, நிதியமைச்சரான என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

### இனிப்பான செய்தி!

அதற்கு முன்பாக, நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, விவாதங்களை முடித்து, அதற்குப் பிறகு இருக்கக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில் மிக, மிக குறிப்பிடத்தக்க ஒரு செய்தி, தமிழ்நாட்டிற்கு ஓர் இனிப்பான செய்தியாக அமைந்திருக்கிறது. ஏறத்தாழ 14 வருடங்களுக்குப் பிறகு தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி 11.19 சதவிகிதம் என்கிற இரட்டை இலக்கத்தை நாம் எய்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும், நாம் திட்ட மிட்டதைக் காட்டிலும், 2.2 சதவிகிதம் அதிகமான பொருளாதார வளர்ச்சியைப் பெற்றிருக்கக்கூடிய மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மகத்தான சாதனை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய பல்வேறு பணிகள், அவருடைய ஓயாத உழைப்பு, அவருடைய முயற்சிகளின் காரணமாக விளைந்த ஒன்று என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அதை நான் விளக்கமாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவருடைய ஓயாத உழைப்பும், அவருடைய திட்டமிட்டப் பணிகளும் தான் அருஞ்சாதனைகளுக்கு அடிகோலிட்டிருக்கிறது. கடைசியாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த 2010-2011 ஆம் ஆண்டில் இந்த இரட்டை இலக்கு பொருளாதார வளர்ச்சியைப் பெற்ற நாம், அதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பீடுநடை போடக்கூடிய திராவிட மாடல் ஆட்சியில் தான் இரட்டை இலக்கை நாம் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் வாயிலாக 2030-ல் One Trillion American Dollar பொருளாதாரத்தை நாம் நிச்சயமாக எட்டுவதற்கு, இது ஓர் அடிப்படை மைல் கல்லாக அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே பெருமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் தொடக்கத்தில் குறிப்பிட்டுச் சொன்னதைப் போல, ஒரு நாட்டினுடைய வளர்ச்சியில், ஒரு நாட்டினுடைய அடிப்படைக் கட்டமைப்புகளில் சில முக்கியமான அங்கங்கள் இருக்கின்றன. அதன்மூலமாக பெறக்கூடிய வளர்ச்சி தான், மாநிலமாக இருந்தாலும், நாடாக இருந்தாலும், அந்த நாட்டினுடைய ஒட்டு மொத்த வளர்ச்சிக்கான குறியீடுகளாக அமைகின்றது. அந்த வகையில் ஒரு நாட்டினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியை நீங்கள் பார்ப்பேன் என்று சொன்னால், எங்கே நாம் அதிகமான வளர்ச்சி நிலையை எய்த வேண்டும் என்றால், அடிப்படையிலே நாம் அனைவரும் அறிவோம். கல்வியிலே வளர்ச்சியினைப் பெற வேண்டும்.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், குடிப்பதற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய குடிநீர். அதேபோன்று, நமக்கு கிடைக்கக்கூடிய நிதிப் பகிர்வின் மூலமாக எதிர்கால திட்டங்களை உருவாக்கக்கூடிய ஒரு நிலைமை. நம்முடைய எதிர்கால சந்ததியினரை எந்த அளவிற்கு நாம் கொண்டு செல்கிறோம்.

ஆக, இவையெல்லாம் உள்ளடக்கியிருக்கக்கூடிய, ஓர் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியாக இருந்தாலும், ஒரு நாட்டினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியாக இருந்தாலும், அந்த வளர்ச்சிதான் ஒரு நாட்டிற்கு நிலையானதொரு வளர்ச்சியாக SUSTAINABLE DEVELOPMENT ஆக அமையும் என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆனால், ஒன்றிய அரசு இந்தக் குறியீடுகளில் தமிழ்நாட்டைப் பொறுத்தளவில், எந்தளவிற்கு தொடர்ந்து நம்மை வஞ்சிக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே சொல்வது பொருத்தமாகவும், காலத்தின் கட்டாயமாகவும் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### தமிழ்நாட்டில் கல்விக் கட்டமைப்பு!

உதாரணத்திற்கு, கல்வியை எடுத்துக்கொண்டால், கல்விக்கான நிதியைப் போராடி பெறுவது எந்த வகையிலே இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக தமிழ்நாட்டிலே கல்விக் கட்டமைப்பு எந்த வகையிலே சிறப்பாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அடுத்தடுத்து வரக்கூடிய பல்வேறு ஆட்சி முறைகளாக இருந்தாலும், கல்விக்கென ஓர் உறுதியான கட்டமைப்பை உருவாக்கியிருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

ஆனால், ஒன்றிய அரசு ஏனோ நமக்கே உரித்தாக இருக்கக்கூடிய ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்திற்காக வழங்கக்கூடிய நிதியினை தொடர்ச்சியாக வழங்குவதற்கு மறுத்து வருகிறது. நான் இந்தப் பேரவைக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக நாம் கல்வியிலே கொண்டு வந்திருக்கிற முற்போக்கு கொள்கையின் விளைவாக அகில இந்திய அளவிலே பள்ளிக் கல்வியை நாம் ஒரு சிறந்த அமைப்பாக தமிழ்நாட்டிலே உருவாக்கியிருக்கிறோம்.

இருந்தாலும், ஒன்றிய அரசு ஏறத்தாழ 4 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய நிதியை தர மறுத்து, கல்வி உரிமைச் சட்டம், RTE என்று சொல்லக்கூடிய கல்வி உரிமைச் சட்டத்தின்பால், நமக்கு வழங்கக்கூடிய 450 கோடி ரூபாய் நிதியை மட்டுமே தற்போது விடுவித்திருக்கிறார்கள். விடுவிக்க வேண்டிய பணம் எவ்வளவு? 4 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால், கொடுத்திருக்கக்கூடிய பணம் எவ்வளவு? வெறும் 450 கோடி ரூபாய். இந்த நிதியைக்கூட பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு வழங்கியிருக்கிறார்கள். இந்த 4 ஆயிரம் கோடி ரூபாய் நிதி எதற்காக வருகிறது? பிள்ளைகளுடைய கல்விக்காக வருகிறது, ஆசிரியர்களுடைய சம்பளத்திற்காக வருகிறது. பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக வர வேண்டியது.

ஆனால், அனைத்தையும் தெரிந்து கொண்டிருக்கக்கூடிய ஒன்றிய அரசு, திட்டமிட்டே இந்த நிதியை விடுவிக்காததன் காரணமாக, இந்த வளர்ச்சிப் பணிகள் இன்றைக்கு முடங்கி போய் இருக்கிறது. இருந்தாலுங்கூட, நீங்கள் என்னதான் இந்த நிதியை முடக்கி வைத்திருந்தாலும் கூட, நாட்டுமக்களுக்கு கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் நாங்கள் நிறைவேற்றுவோம் என்கின்ற தூய எண்ணமுடைய நம்முடைய முதலமைச்சர் அவர்கள், எந்தக் குழந்தையினுடைய படிப்பையும், நிதியாதாரங்கள் இல்லையென்ற காரணத்தால் நாங்கள் நிறுத்தி விட மாட்டோம் என்கின்ற அந்த உயரிய நோக்கோடு (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி எந்தக் குழந்தையும் பாதிப்படைய நான் விட்டுவிட மாட்டேன் என்கின்ற உறுதியான நிலைப்பாட்டோடு, நம்முடைய மாநிலத்தினுடைய சொந்த நிதியாதாரங்களைக் கொண்டு, இன்றைக்கு ஒன்றிய அரசாங்கம் அந்த நிதியை விடுவிக்காவிட்டாலும், ஆசிரியர்களுக்கான சம்பளமாக இருந்



தாலும், மாணவர்களுக்கான கல்வி நிதிகளாக இருந்தாலும், உட்கட்டமைப்பு வசதிகளாக இருந்தாலும், நாங்கள் மாநில நிதியிலிருந்து அவற்றிற்கு நிதியினை விடுவித்துத் தருகிறோம் என்று அவர்கள் விடுவிக்கிறார்கள்.

### மாநிலத்தின் சொந்த நிதி!

அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், கல்வி என்பது நாம் விளையாடக்கூடிய அரசியல் களம் அல்ல; அது அரசியல் இயக்கங்கள் ஒவ்வொன்றிற்கும் இருக்கக்கூடிய தார்மீகமான ஒரு பொறுப்பு என்பதை உணர்ந்திருக்கக்கூடிய காரணத்தால்தான், முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு, இன்றைக்கு மாநிலத்தினுடைய சொந்த நிதியிலிருந்து அதற்கான நிதிகளை விடுவித்திருக்கி றார்கள். இன்னும்கூட சொல்வேன்; இப்படி ஒன்றிய அரசாங்கத்திடமிருந்து நாங்கள் கேட்பது என்பது உங்களிடத்திலிருந்து நாங்கள் பெறக்கூடிய உதவிகளாக நீங்கள் எண்ணிப்பார்க்காதீர்கள். அதிலும் ஏதோ எங்கள்மீது இரக்கப்பட்டு, நீங்கள் தரக்கூடிய உதவிகளாக எண்ணிவிடாதீர்கள். இது எங்களுடைய உரிமைகளுக்காக நாங்கள் எழுப்பக்கூடிய குரல் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ளுங்கள் என்று நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உரிமைப் போராட்டத்தில் எங்களுக்கானநீதியைநிலைநாட்டுவதில் நாங்கள் இறுதிவரை போராடுவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். படிக்கக்கூடிய கல்விக்கான நிதி மட்டுமல்ல, குடிக்கக்கூடிய தண்ணீருக்கான நிதியையும்கூட நீங்கள் தர மறுக்கிறீர்கள். கிராமங்களிலேயும், நகர்ப்புறங்களிலேயும் இருக்கக்கூடிய தவித்த வாய்க்கு தண்ணீர் கொடுக்கக்கூடிய திட்டமாக இன்றைக்கு நாம் கருதி செயல்படக்கூடிய திட்டம் ஜல்ஜீவன் திட்டம். அந்தத் திட்டத்திற்கான நிதி, ஒன்றிய அரசாங்கத்திலிருந்து வர வேண்டிய நிதி, தமிழ்நாடு அரசாங்கம் பல்வேறு குடிநீர்த் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டு வந்தாலுங்கூட, இந்த ஜல்ஜீவன் திட்டத்திலே ஒன்றிய அரசினுடைய பங்காக நீங்கள் அளிக்க வேண்டிய தொகை எவ்வளவு தெரியுமா? 3407 கோடி ரூபாய். அதை நீங்கள் எங்களுக்கு வழங்கப்பட வேண்டியிருந்தும், இதுகாறும் அந்த நிதி நமக்கு வழங்கப்படாமல் ஒன்றிய அரசு நம்மை வஞ்சித்து வருகிறது.

இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஒன்றிய அரசு கொடுக்கக்கூடிய அந்தப் பங்குத் தொகையுடன் சேர்த்து, தமிழ்நாடு அரசினுடைய பங்கையும் சேர்த்து, இந்த இரண்டுக்குமாக சேர்த்து, தற்காலிகமாக மாநில அரசே இந்த இரண்டுக்குமான அந்த நிதியை நம்முடைய பொறுப்பிலிருந்து நாம் விடுவித்துக்கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் எண்ணிப் பாருங்கள். தமிழ்நாடு அரசினுடைய பங்கையும் தருகிறோம்; உங்களுடைய சுமையையும் நாங்கள் சேர்த்து;R சுமக்கின்றபோது, இது மிகப்பெரிய ஒரு நிதி அழுத்தத்தை நம்முடைய நிதி நிர்வாகத்தின்மீது கொண்டுவந்திருக்கிறது என்பதை நான் இந்த அவைக்கு கவனப்படுத்த விரும்புகிறேன்.

எனவே, ஒன்றிய அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கக்கூடிய உங்களுடைய திட்டங்களுக்குக்கூட இந்த நிதிகளை ஒதுக்காமல் இருப்பது என்பது என்னைப் பொறுத்தமட்டில், மன்னிக்கவும், நான் குறிப்பிட்டுச்சொல்ல வேண்டுமென்றால், இது அப்பட்டமான அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை நான் இந்த மன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். எனவே, நான் கேட்டுக்கொள்வது, அனைவருக்கும் சமவாய்ப்பை அளிக்கக்கூடிய வகையில், அனைத்து மாநிலங்களுக்கும் சமவாய்ப்பை அளிக்கக்கூடிய வகையில், ஒன்றிய அரசு உடனடியாக இந்த நிதிகளை விடுவிக்க வேண்டும். அந்த வாய்ப்பினை அனைத்து மாநிலங்களுக்கும் வழங்குவதைப்போல தமிழ்நாட்டிற்கும் அரசியல் காரணங்களைத் தாண்டி நீங்கள் வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். அதைப்போல, உட்கட்டமைப்பு நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள் என்றால், நெடுஞ்சாலைகள் அதில் மிகப்பெரிய பங்களிப்பை வகிக்கின்றன. தமிழ்நாட்டில் நீங்கள் பார்ப்பீர்களென்றால், பல்வேறு இடங்களில் இன்றைக்கு தமிழ்நாட்டின் குறுக்கும் நெடுக்குமாகச் செல்லக்கூடிய FOUR LANE TRAFFIC என்று சொல்லக்கூடிய நான்கு வழிச்சாலைகள், சென்னையிலிருந்து இன்றைக்கு கன்னியாகுமரிக்கு போகிறோம். அதைப்போல, சென்னையிலிருந்து கிருஷ்ணகிரிக்கு போகிறோம்.

### சாலைக் கட்டமைப்புகள் வழித்தடங்கள்!

சென்னையிலிருந்து சேலத்திற்கு செல்கிறோம் என்று சொன்னால், இன்றைக்கு சாலை கட்டமைப்புகள் மிகப் பெரிய அளவிலே வந்திருக்கக்கூடிய காரணத்தால், நம்முடைய தொழில் வளர்ச்சி மிகப்பெரிய அளவிலே உருவாகியிருக்கிறது. 2024-2025 ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசினால் 8 புதிய தேசிய அதிவேக நெடுஞ்சாலை வழித்தடங்கள் மொத்தம் ரூ.50,655 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டன. அதில், உத்தரப்பிரதேச மாநிலம் மட்டும் 3 வழித்தடங்களைப் பெற்றிருக்கிறது. 8 வழித்தடங்களில் 3 வழித்தடங்கள் உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு என்று, அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.11,846 கோடி. குஜராத் மாநிலத்திற்கு ஒரு வழித்தடம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.10,534 கோடி. மகாராஷ்டிராவிற்கு ஒரு வழித்தடம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.17,827 கோடி என மொத்தமாக நீங்கள் கூட்டிப்பார்த்தால், நான் குறிப்பிட்டதைப் போல அந்த மாநிலங்களுக்கெல்லாம் ரூ.30,207 கோடி. இங்கு நான் குறிப்பிட்டிருக்கின்ற மொத்தம் ரூ.50,655 கோடி ஒதுக்கீட்டில், இந்த 3 மாநிலங்களுக்கு மட்டும் ரூ.30,207 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**பேரவைத் தலைவர் :** 38 ஆயிரம், 38 ஆயிரத்து.

**தங்கம் தென்னரசு:** கொடுக்கக்கூடிய தொகை. ஆனால், தமிழ்நாட்டிற்கு ஒன்றுகூட இல்லை. (குறுக்கீடு) அவர் என்னதான் சபாநாயகராக இருந்தாலும், வாத்தியார் இல்லையா!

**பேரவைத் தலைவர்:** நீங்கள் 10 ஆயிரம் கோடி, 11 ஆயிரம் கோடி, 17 ஆயிரம் கோடி என்று சொன்னீர்கள். அதனால் தான் 38 ஆயிரம் கோடி என்று சொன்னேன்.

**தங்கம் தென்னரசு:** நான் சொன்னது தான். (குறுக்கீடு) இதிலிருந்து நீங்கள் என்ன கவனத்தில் கொள்ளவேண்டும் என்றால், சபாநாயகர் என்பவர் மிகுந்த நடுநிலை பொறுப்போடு, (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சரே விட்டுவிட்டாலும்கூட அமைச்சரையும் திருத்தக்கூடிய பொறுப்பினை அவர் ஏற்கிறார். நான் ஒன்றை விட்டுவிட்டாலும், எனக்கென்று எடுத்துக்கொடுக்கக்கூடிய ஒரு ஆசிரியராகத்தான் சபாநாயகர் இப்போதும் இருக்கிறார். நிதி ஒதுக்கம் ஒருபுறம் இருக்கட்டும். இந்த 8 புதிய அதிவேக சாலைகளில் ஒரு சாலைகூட தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவில்லை என்பதுதான் நீங்கள் இங்கே குறித்துக்கொள்ள வேண்டிய, கவனமாக கேட்கவேண்டிய ஒன்று. 8 புதிய சாலைகள் இருக்கின்றன. அந்த 8-ல் ஒன்றை தெற்கிற்கு கொடுத்தால் என்ன? (குறுக்கீடு) இதைப் பாருங்கள், Already developed என்று சொன்னால், எத்தனை இடங்கள் இன்றைக்கு, நாம் செய்ய வேண்டிய இடங்கள் இருக்கின்றன. நாம் மனசாட்சியோடு எண்ணிப்பார்ப்போம் என்று சொன்னால், நான் அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் எப்படி பா.ஜ.க.-வுடன் அ.தி.மு.க. எந்த அளவிற்கு ஐக்கியம் ஆகிவிட்டீர்கள் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம். (சிரிப்பு) காரணம் அவர் அதைத்தான் சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன காரணம்.

### எந்த வகையில் நியாயம்?

நிதிப் பகிர்வு என்று வருகிறபோது, Finance Commission சார்பாக வந்தவர்கள் நீங்கள் எல்லாம் developed States என்று சொன்னார்கள். Developed States என்று சொல்லக்கூடிய அந்த காரணத்தினால் தான் தமிழ்நாட்டினுடைய உள்கட்டமைப்பை--உங்களுக்கும் சேர்த்து சொல்வேன். நீண்ட பல காலமாக நாம் உருவாக்கியிருக்கக்கூடிய இந்த உட்கட்டமைப்பு, நாம் உருவாக்கியிருக்கக்கூடிய கல்வி கட்டமைப்பு, மருத்துவ கட்டமைப்பு, நாம் உருவாக்கி இருக்கக்கூடிய சமூக பொருளாதார காரணிகளுடைய வளர்ச்சி, ஆக இவற்றையெல்லாம் எண்ணி நாம் பெருமைப்படக்கூடிய அதேநேரத்தில், இவற்றையெல்லாம் குறித்து உங்களுடைய வார்த்தையில் சொல்லவேண்டுமென்று சொன்னால், நீங்கள் DEVELOPED STATE என்கிற ஒரே காரணத்திற்காக தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டு, PENALISE செய்யப்படுகிறது என்பதை நீங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ச்சிக்கு வருகிறோம். வளரக்கூடிய பிள்ளைகளுக்கு நீங்கள் வளர்ந்துவிட்டீர்கள் என்பதற்காக ஊட்டச்சத்தை நிறுத்துவேன் என்பது எந்தவகையில் நியாயம். எனவே, நான் திருப்பி வருவேன் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) 8-ல் ஒரு சாலைகூட நீங்கள் தமிழ்நாட்டிற்கு தரவில்லை என்பதை நான் சொல்வேன். அதேபோல NHAI தேசிய நெடுஞ்சாலை ஆணையம், மொத்த செலவினமாக அவர்கள் செய்திருப்பது-- ரூ.27,986 கோடி தமிழ்நாட்டிற்கு NHAI-லிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உத்திரப்பிரதேச மாநிலத்திற்கு NHAI எவ்வளவு கொடுத்திருக்கிறது என்றால், ரூ.81,803 கோடி. தமிழ்நாட்டை விட மூன்று மடங்கு அதிகம். நான் இந்த வித்தியாசங்களை, ஏதோ நிதி ஒதுக்கீட்டிற்காக வரக்கூடிய வித்தியாசங்களாக, குறைபாடுகளாக சொல்லவில்லை. இது இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கக்கூடிய ஒரு அப்பட்டமான அரசியல் பாகுபாடு என்று நான் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. அதன் காரணமாக இந்தியா ஒரு கூட்டாட்சி அமைப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்திய நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களும் சமமாக பார்க்கப்பட வேண்டும். ஆனால், தமிழ்நாட்டிற்கு இருக்கக்கூடிய அந்த நியாயமான பங்கும், வளர்ச்சிக்கான உரிமையும் திட்டமிட்டவாறு மறுக்கப்படுகிறது, புறக்கணிக்கப்படுகிறது என்பதுதான் என்னுடைய வாதமாகும்.

### இரயில்வே திட்டங்கள்!


அதேபோல, இரயில்வே திட்டங்களை எடுத்துக்கொள்ளுங்கள். நெடுஞ்சாலை மட்டுமல்ல முதல்வர் அவர்களும், தமிழ்நாடு அரசும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இரயில்வே திட்டங்களுக்கு உரிய நிதிகளை தாருங்கள், புதிய இரயில்வே திட்டங்களைத் தாருங்கள் என்று நேரம் வாய்க்கிறபோதெல்லாம், சந்தர்ப்பம் வாய்க்கிறபோதேல்லாம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பாரத பிரதமர் அவர்களிடத்திலேகூட பல்வேறு சமயங்களிலே தமிழ்நாட்டின் சார்பிலே கோரிக்கை மனுக்களை அளித்து, அவரை சந்திக்கிறபோதெல்லாம் அதை வலியுறுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக கோயம்புத்தூர்-கரூர், கோயம்புத்தூர்-கோபிசெட்டிப்பாளையம், பவானி-சேலம், மதுரை-வேலூர், இனாம்குளத்தூர் போன்று இருக்கக்கூடிய முக்கியமான பாதைகளுக்கு அனுமதியினை கேட்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல நேரங்களிலே வலியுறுத்தியிருக்கிறார்கள்.

ஆனால், அந்தக் கோரிக்கைகள் ஒன்றிற்குக்கூட ஒன்றிய அரசு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே, பல மாவட்டங்களிலுள்ள பகுதிகளும் இந்த இரயில்வே இணைப்புகள் கிடைக்காமல் விலகியிருக்கக்கூடிய காரணத்தால், அந்த மாவட்டங்களுடைய வணிகம், தொழில் வளர்ச்சி பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இரயில்வே திட்டங்களை நீங்கள் எடுத்துக் கொண்டாலும் கூட, மூன்றாண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய மொத்த இரயில்வே நிதி 19,068 கோடி ரூபாய். ஆனால், உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு இந்தாண்டு 2025-2026 ஆம் நிதியாண்டில் மட்டும் 19,858 கோடி ரூபாய். அதாவது, 3 ஆண்டுகளில் நமக்கு வழங்கியது 19,068 கோடி ரூபாய்; ஆனால், இந்த 2025-2026 ஒரே நிதியாண்டில் மட்டும் உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு 19,858 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, மூன்றாண்டுகளில் நமக்கு வழங்கப்பட்ட தொகையானது, ஒரே ஆண்டில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசு காட்டக்கூடிய பாகுபாட்டிற்கு இதுதான் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இது நிதி ஒதுக்கீட்டில் இருக்கக்கூடிய பாகுபாடு மட்டுமல்ல; அரசியல்ரீதியாக நீங்கள் காட்டக்கூடிய பாகுபாட்டையும் இது சுட்டிக்காட்டுகிறது.

### உ.பி.க்கு கூடுதல் ஒதுக்கீடு!

அடுத்ததாக, உத்தரப் பிரதேசத்தில் 92,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 68 இரயில்வே திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 33,467 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22 இரயில்வே திட்டங்கள்தான் இருக்கின்றன. அவர்கள், நம்மைவிட 3 மடங்கு அதிகமான இரயில்வே திட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட, சட்டமன்ற உறுப்பினர் சகோதரி திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசும்போது, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் நீங்கள் பெற்றதைவிட, நாங்கள் அதிகம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். 2009-2014 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தையும், 2014-2024 ஆம் ஆண்டுகளில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக் காலத்தையும் ஒப்பிடுகிறபோது, உத்தரப் பிரதேச மாநிலத்திற்கான சராசரி வருடாந்திர ஒதுக்கீடு 18 மடங்கு அதிகரித்திருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிற்கு வெறும் 6 மடங்காக மட்டுமே இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, இந்தக் கூட்டாட்சி அமைப்பில் அனைத்து

தொடர்ச்சி 4ஆம் பக்கம்



கடலூர் மாவட்டம், கழுதூர் கிராம பகுதியில் மக்காச்சோளம் களை எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது கழுதூர் கிராமத்தை சேர்ந்த பாரிஜாதம், ராஜேஸ்வரி, சின்னப் பொண்ணு, கனிதா ஆகிய நான்கு பேர் மழையின் காரணமாக ஏற்பட்ட இடி, மின்னல் தாக்கி உயிரிழந்து திட்டக்குடி அரசு மருத்துவமனையில் உள்ள உடலுக்கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் சி.பி.ஆதித்ய செந்தில்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், விருத்தாசலம் வருவாய் கோட்டாச்சியர் விஷ்ணுப் பிரியா ஆகியோர் உள்ளனர்.